செய்தி வெளியீடு எண் :120 நாள் :26.02.2017

**திருவள்ளூர் மாவட்டத்தில் சீமை கருவேலம் மரங்களை முற்றிலுமாக 20-03-2017 தேதிக்குள் தத்தம் பட்டா நிலங்களிலிருந்து வேரோடு அகற்ற பொது மக்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி இ.ஆ.ப., அவர்கள் வேண்டுகோள்.**

~~~~~

கருவேலம் மரங்களின் வேர்கள் நிலத்தில் ஆழமாக சென்று பரவும், எனவே இம்மரங்களின் வேர்கள் நிலத்தடி நீரை வெகுவாக உருஞ்சிவிடுவதால் மற்ற செடிகொடிகள் மற்றும் மரங்கள் வளர்வது பாதிக்கப்படுவதாலும் வறட்சியும் ஏற்படுகிறது. திருவள்ளூர் மாவட்டத்தில் சீமை கருவேலம் மரங்களை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும் என மாவட்ட நிர்வாகம் சார்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளதாவது சென்னை உயர்நீதிமன்ற, மதுரை கிளை உத்திரவின்படி சீமை கருவேலம் மரங்களை முற்றிலும் அழிக்கப்பட வேண்டும். இப்பணிகளை மேற்கொள்ள ஊரக வளர்ச்சித் துறை, வருவாய் துறை, நகராட்சி, பேரூராட்சி, நெடுஞ்சாலைகள் துறை, பொதுப்பணித்துறை(கட்டிடம்), பொதுப்பணித்துறை (நீர்நிலைகள்), வனத்துறை, இந்து சமய அறநிலையத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை மற்றும் வேளாண்மைத்துறை மற்றும் தோட்டக் கலைத் துறை, ஆகிய துறைகள் தத்தம் பெறுப்பில் உள்ள நிலங்களிலிருந்து இருந்து மார்ச் 15-ம் தேதிக்குள் முற்றிலுமாக சீமை கருவேலம் மரங்களை அகற்றிட வேண்டும். அனைத்து துறைகளை சேர்ந்த அலுவலர்கள் சீமை கருவேலம் மரங்களை பற்றிய கணக்கெடுப்பு செய்து அதனை 1-ம் தேதிக்குள் அறிக்கையாக மாவட்ட நிர்வாகத்திடம் வழங்க வேண்டும்.

சீமை கருவேலம் மரங்களை அகற்றுவதால் நிலத்தடி நீர் ஆதாரம் உயரும். சீமை கருவேலம் மரங்கள் வேரோடு அகற்றப்பட வேண்டும், இல்லையெனில் மீண்டும் அது துளிர்த்துவிடும். பொது மக்கள் அனைவரும் தங்களுக்கு சொந்தமான நிலங்களில் உள்ள சீமை கருவேலம் மரங்களை மார்ச் 20-ம் தேதிக்குள் வேரோடு அகற்றிட வேண்டும். அவ்வாறு பொது மக்கள் தங்கள் நிலங்களில் உள்ள மரங்களை அகற்ற தவறினால் அரசு துறைகளே அதனை அகற்றி உரியவர்களிடமிருந்து அதற்க்கான தொகையை இரு மடங்காக வசூலிக்கப்படும்.

எனவே பொது மக்கள் தங்கள் நிலங்களில் உள்ள சீமை கருவேலம் மரங்களை வருகிற 20-03-2017 தேதிக்குள் விரைந்து அகற்றிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~